21st April 1959]

இரண்டாவது கூட்டம் 11-4-1959 அன்று நடைபெற்றது. இக் கூட்டங்களில், முதலாளிகள் மத்திய சர்க்கார் இதற்காக என்று ஒதுக்கியிருக்கும் தொகையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், வீடு கட்டுவதற்காக அவர்கள் அதிகமாகக் கொடுக்கும் பணத்தைப் பெறவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அவ்வாறு அவர்கள் ஒரு வருஷ காலத்திற்குள்ளாக வீடு கட்டாவிட்டால் சட்டம் இயற்ற வேண்டுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்யும்.

SRIMATHI A. S. PONNAMMAL : கிராமப்புறங்களில் குறைந்த வருமானம் வரக்கூடிய விவசாயிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு என்று ஒரு புதிய திட்டம் ஒன்று போட்டுக்கொண்டிருக்கிறோம்.

SRI S. LAZAR : 1959-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திற்குள் தொழிலாளர்களுக்கு 4 சத விகிதம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சிலர் சந்தோஷப்பட்டாலும் சிலருக்கு அது சந்தோஷமாக இல்லை. பெரிய தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய இடங்களில் அதிகப்படியான வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி அதிகப்படியாகக் கட்டிக்கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்தி அதன்படி கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி 4 சத விகிதம் கட்டினால் போதும் என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானம் பண்ணவில்லை. வருஷா வருஷம் 4 சத விகிதம் கட்டவேண்டும் என்றும் அதன்படி 12 வருஷ காலத்திற்குள் 50 சத விகிதம் தொழிலாளர்களுக்கு கட்டி முடிவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

Extension of the Madras City Tenants' Protection Act to the Thiruvarur area

* 46 Q.— SRI C. MUTHIAH : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

திருவாரூர் நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்கு பகுதி மனை குடியிருப்போர் பாதுகாப்பு சட்டத்தை விஸ்தரிக்குமாறு திருவாரூர் நகர காங்கிரஸ் கமிட்டி 5-5-57-ல் தீர்மானம் நிறைவேற்றியும், தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி 14-7-57-ல் தீர்மானம் நிறைவேற்றியும், நாகப்பட்டிணத்தில் தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாட்டில் 23, 24, 25-4-58 தேதிகளில் தீர்மானம் நிறைவேற்றியும் சென்னை சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் தீர்மானங்கள்மீது சர்க்கார் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The resolutions referred to by the hon. Member have not been sent to Government. But the Government received a number of petitions in 1956 and 1957 regarding the extension of the Madras City Tenants' Protection Act to the Tiruvarur Municipal area. After examining

[21st April 1959

the question carefully in consultation with the Collector of Tanjore and the Board of Revenue, the Government decided that it was not necessary to extend the Act.

SRI C. MUTHIAH : திருவாரூர் நகர சபை பல மனுக்கள் கொடுத்திருந்தும் கலெக்டர், ரெவினியூ போர்ட் அப்படி இல்லை என்று சொல்வதையும் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டதா. அப்படி இல்லாமல் அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி அரசாங்கம் உத்தரவிடுமா ? மாகாணம் பூராவும், முனிசிபல் நகரங்கள் பூராவும் அதை விஸ்தரிக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் ஒரு சாராருக்கு சந்தோஷம் வருவதும் மற்றொரு சாராருக்கு துக்கம் வருவது என்பதும் சகஜம்தான். கலெக்டர் இதைப்பற்றி பரிசீலனை செய்து அது அவசியம் இல்லை என்று சொல்லுகிறார். மேலும் பஞ்சாயத்தும் இதைப்பற்றி பரிசீலனை செய்து அவசியம் இல்லை என்று சொல்லி இருக்கிறது. ஏதோ ஒரு அரசியல் கட்சி மாத்திரம் இது வேண்டும் என்று முறையிட்டது. அதைப்பற்றியும் பரிசீலனை செய்து அது வேண்டாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

Supply of soda ash to washermen

* 47 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have recently received any representation from the Washermen Association regarding the scarcity of "Soda Ash" and the difficulties experienced by them: and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The State Trading Corporation have been requested to allot every month a quota of 100 tons of soda ash for distribution to the Washermen Association in the State through the stockists of the Corporation. The Washermen Associations will obtain the quantity allotted to them through the stockists of the State Trading Corporation on production of permits issued by the Assistant Directors of Industries in the Districts.

SRI C. R. RAMASWAMI : Sir, are the Government aware that in the last two months there has practically been no supply of washing soda, and that the washermen have not received any washing soda at all?

THE HON. SRI R. VENKATARAMAN : That is not wholly true. But there is shortage of washing soda.